

பாமாலை 667 நித்திரை செய்யாமல்

1 நித்திரை செய்யாமல்
ஆட்டைத் தீங்கில்லாமல்
காக்கும் மேய்ப்பரே;
என்னையும் கடந்த
பகலில் அனந்த
அன்பாய்க் காத்தீரே ;
ராவிலும் பார்த்தருளும்
தேவ தூதர் காவலையும்
என்னண்டையில் வையும்.

2 நான் பயப்படாமல்
சஞ்சலமில்லாமல்
இளைப்பாற நீர்
என் அறையைப் பூட்டும்
இந்தக் குஞ்சைக் கூட்டும்
தேவ செட்டைக் கீழ்
அப்போதான் என்னைச்
சாத்தான்
பீறத் தேடியும், அடியேன்
அஞ்சித் தத்தளியேன்

3 அடியேனை இன்று
படுக்கையினின்று
நீர் அழைப்பீரோ
தேவரீரின் சித்தம்
நல்லதென்று நித்தம்
சொல்லுவேன் இதோ
இப்போதே என் மீட்பரே
உம்மண்டை வழி நடத்தும்
மரணம் வரட்டும்

4 நித்திரைக்கிப்போது
நான் சந்தோஷத்தோடு
கண்ணை மூடுவேன்
உமக்காவியையும்
தேகம் உயிரையும்
ஒப்புவிக்கிறேன்
தேவரீர் கண் விழிப்பீர்
காலை நான் பிழைத்தால் நீரே
பாதுகாத்தாள்வீரே .